# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

CITU

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com


**சுற்றறிக்கை எண் 6/2013** **நாள் : 27/2/2013**

*பெறுநர்*

***மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்,***
***கிளைச் செயலாளர்கள் மற்றும்***
***மாநில செயற்குழு உறுப்பினர்கள்.***

அன்பான தோழரே, வணக்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 26.2.2013 அன்று திருச்சியில் மத்திய அமைப்பின் மாநில தலைவர் தோழர் கே. விஜயன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் 25 மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொண்ட மாநில சி.ஐ.டி.யு. வின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் ஆர். கருமலையான் அவர்களும் மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில தலைவர் தோழர் கே. விஜயன் அவர்களும் 2013 இல் பிப்ரவரி 20, 21 தேதிகளில் நடைபெற்ற அகில இந்திய வேலை நிறுத்தம் சம்மந்தமாகவும் 5.3.2013 அன்று மின் ஊழியர் மத்திய அமைப்பு நடத்த உள்ள 24 மணி நேர பெருந்திரள் கூட்டு முறையீடு சம்மந்தமாகவும், 2012 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பை இறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினர்.

மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில பொதுச் செயலாளர் தோழர் எஸ்.எஸ். சுப்ரமணியன் சென்ற மாநில செயற்குழு கூட்டத்திற்கு பின்னர் நடைபெற்ற பணிகள் குறித்து ஓர் அறிக்கையை முன் வைத்தார்.

பொதுச் செயலாளர் அறிக்கையில் 2013, பிப்ரவரி 20, 21 தேதிகளில் இந்திய நாடு முழுவதும் ஒரு மகத்தான வேலை நிறுத்தம் நடைபெற்றுள்ளதையும், அதில் மின் வாரிய ஊழியர்களின் பங்களிப்பு ஒரு குறிப்பிடத்தக்க வகையில் அமைந்து இருந்தது என்று சொல்லி மின் வாரியத்தில் இரு நாட்களிலும் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை சம்மந்தமாகவும், இந்த வேலை நிறுத்தத்தையொட்டி கொண்டு வந்த துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் மற்றும் சுயேட்சையாகவும், கூட்டாகவும் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெற்ற விபரங்களை கிளைகளிலிருந்து பெறப்பட்ட விபரங்களை தனது அறிக்கையில் குறிப்பிட்டார்.

அதாவது மின் வாரியத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் 28589 நிரந்தர தொழிலாளிகளும், 5000க்கும் மேற்பட்ட பகுதி நேர ஊழியர்களும் 5000 க்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களும் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டுள்ளதையும், மின்வாரிய வரலாற்றில்

இல்லாத அளவிற்கு பொதுப் பிரச்சனைகளை முன் வைத்து நடைபெற்ற இரண்டு நாள் வேலை நிறுத்தத்தில் இவ்வளவு அதிகமான ஊழியர்கள் பங்கேற்புக்கு, கூட்டு இயக்கமே காரணம் என்றும், மேலும் இந்த வேலை நிறுத்தத்தையொட்டி மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில மையத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட சுவரொட்டி, தவிர வட்ட அளவில் கொண்டு வந்த துண்டு பிரசுரங்கள், பிரச்சாரக் கூட்டங்கள் ஆகியவற்றை முன் வைத்ததோடு இந்த வேலை நிறுத்த தயாரிப்பு, கலந்து கொண்டோர்களின் எண்ணிக்கையை கிடைத்த விபரங்களோடு, கூடுதலான விபரங்களை பெற்று முழுமைப்படுத்த வேண்டியுள்ளது என்பதையும் முன் வைத்தார்.

2012 டிசம்பரில் நடைபெற்ற மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில மாநாட்டில் மின் வாரிய ஊழியர்களின் தேங்கியுள்ள பிரச்சனைகளின் மீது அரசின் வாரியத்தின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் 5.3.2013 அன்று மின்வாரிய ஊழியர்களை திரட்டி 24 மணி நேர கூட்டு முறையீடு செய்வது சம்மந்தமாக நாம் எடுத்த முடிவு, அதனை யொட்டி வாரியத்திற்கு கொடுத்த கடிதம் அதன் மீது நடைபெற்ற பேச்சு வார்த்தை அதில் ஏற்பட்டிருக்கின்ற சில முன்னேற்றங்கள் பேச்சு வார்த்தைக்கு முன்னரே நாம் வைத்த கோரிக்கைகளில் சிலவற்றிற்கு சாதகமான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது போன்றவைகளை முன் வைத்து நாமும், மின் வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பும் இணைந்து 5.3.2013 அன்று நடத்த உத்தேசித்துள்ள அந்த இயக்கத்தை தற்காலிகமாக தள்ளி வைப்பதற்கான ஆலோசனைகளையும் முன் வைத்தார்.

மேலும் நாம் எடுத்த தொடர்ச்சியான முயற்சியின் விளைவாக 28.2.2013 அன்று நடைபெற உள்ள ஊதிய உயர்வு பேச்சு வார்த்தை சம்மந்தமாகவும், மாநாட்டிற்கு பின்னர் அமைக்கப்பட்ட குழுக்களில் ஒன்றான நீதிமன்ற வழக்குகள் குழு கூடி எடுத்த முடிவுகளையும், மாநாட்டு மலர் வெளியீடு, 2013 ஆம் ஆண்டு ஈ படிவம் தயாரிப்பு, 15, 16 தேதிகளில் டெல்லியில் நடைபெற உள்ள இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பின் அகில இந்திய குழுக் கூட்டம், இந்திய மின் ஊழியர், பொறியாளர் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடைபெற உள்ளது என்ற விபரத்தையும், மார்ச் 8 சர்வதேச பெண்கள் தினம் இந்த ஆண்டு பெண்கள் பாதுகாப்பு தினமாக அனுஷ்டிக்க வேண்டியதின் அவசியத்தையும், மாநாட்டிற்கு பின்னர் தேர்வு செய்யப்பட்ட கேட்டகிரி வாரியான கூட்டங்கள் நடத்துவது சம்மந்தமாகவும் குறிப்பிட்டதோடு, 2012 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பை இறுதிப்படுத்த வேண்டியதின் அவசரத்தையும் விளக்கினார்.

**மாநில நிர்வாகிகளின் விவாதத்திற்கு பின்னர் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.**

1. (அ) பிப்ரவரி 20, 21 வேலை நிறுத்தம் சம்மந்தமாக முழுமையான விபரத்தைப் பெற்று ஒரு எழுத்து பூர்வமான அறிக்கையை மாநில நிர்வாகிகள், செயற்குழு கூட்டத்தில் வைத்து பரிசீலிக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

   (ஆ) வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாத மாநில செயற்குழு உறுப்பினர்கள், திட்ட நிர்வாகிகள் எவரேனும் இருப்பாரேயானால் அதன் விபரங்களை கேட்டுப் பெறுவது.

2. மின்வாரிய ஊழியர்களின் தீர்வு காணப்படாத சில கோரிக்கைகள் மீது நமது இயக்க அறிவிப்புக்கு பின்னர் தீர்வு கண்டது, இயக்கத்தை முன் வைத்து வைக்கப்பட்ட கோரிக்கைகள் மீது 25.2.2013 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தை அதில் கோரிக்கைகள்

சிலவற்றை ஏற்றுக் கொண்டும், மேலும் சில கோரிக்கைகளை தீர்ப்பதற்குண்டான கால நிர்ணயம் செய்து வாக்குறுதி கொடுத்தது போன்றவைகளை பரிசீலித்து வாரியத்திற்கு மேலும் கால அவகாசம் அளிக்கும் வகையில் 5.3.2013 அன்று நடத்த இருந்த 24 மணி நேர பெருந்திரள் கூட்டு முறையீட்டு போராட்டத்ததை தற்காலிகமாக தள்ளிவைப்பது (பேச்சு வார்த்தை விபரம் தனியாக இணைக்கப்படுகிறது) இவைகளை விளக்குகின்ற வகையில் வட்ட அளவில் பேரவைகளை உடனடியாக நடத்தி இயக்க தள்ளி வைப்புக்கான காரணத்தை ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்வது.

3. 2012 ஆம் ஆண்டு உறுப்பினர் புதுப்பித்தலை இனியும் கால தாமதமின்றி உடனடியாக முடித்து ஈ படிவம் தயாரிப்பதற்கான பணிகளில் உடனடியாக ஈடுபடுவது.

4. மார்சு 8 சர்வதேச பெண்கள் தினத்தை இந்த ஆண்டு பெண்கள் பாதுகாப்பு தினமாக அனுஷ்டிப்பது என்பதை மின்வாரியத்தில் அமல்படுத்தும் விதமாக மாவட்ட அளவில் சிஐடியு நடத்தும் மாவட்ட இயக்கங்களில் மின்வாரிய பெண்களை கணிசமான அளவில் கலந்து கொள்ளச் செய்வது. மார்சு 8 க்கு பின்னர் சாத்தியப்படுகின்ற வட்டங்களில் தனிக் கூட்டங்கள் நடத்துவதற்கு முயற்சிப்பது.

மேற்கூறிய முடிவுகளை முழுமையாக அமல்படுத்த வேண்டிய நடவடிக்கையில் ஈடுபட வேண்டுகிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

**குறிப்பு:**

1) 88 வருவாய் மேலாளரில் இருந்து, மதிப்பீட்டு அலுவலராக பதவி உயர்வு வழங்க பேனல் வெளியிடப்பட்டுள்ளது. அதில் 50 வருவாய் மேற்பார்வையாளருக்கு 27.02.2013 அன்றே திட்ட ஒதுக்கீடு வழங்கப்பட்டு உள்ளது.

2) கணக்கீட்டு ஆய்வாளரிலிருந்து வருவாய் மேலாளராக பதவி உயர்வு அளிக்க பேனல் தயாரிக்க 1209 ஊழியர்களுக்கு தகுதி காண் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது.

3) மின்வாரியத்தில் உள்ள கணக்கீட்டாளர் 2ம்நிலை பதவிகளை நிரப்ப உள்முகத் தேர்வுக்கு மூலம் தேர்வு செய்ய, களப்பிரிவு ஊழியர்கள், பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் போன்றவர்கள் மத்தியில் விருப்பம் கேட்டு அனுப்பப்பட்டுள்ளது. 15.3.2013 இல் விருப்ப மனுக்களை தலைமையகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.